முழுப் பதிப்புரிமையுடையது

SRI LANKA

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

# AA3 பரீட்சை – 2019 யூலை

# (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

2019-07-20
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினா வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொல் நிரலிற் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**டில்ஷான்** என்பவர் மின்சார உபகரணங்களை இறக்குமதி செய்து சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள கம்பனியொன்றின் கணக்காளர் ஆவார். முகாமைக் கூட்டமொன்றில் இந்த வியாபாரத்தினைப் பாதிக்கும் பொருளாதார மற்றும் சட்டக் காரணிகள் பற்றி ஆராயுமாறு அவர் கேட்கப்பட்டுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

**டில்ஷான்** ஆராயக்கூடிய மூன்று (03) பொருளாதாரக் காரணிகளையும் இரண்டு (02) சட்டக் காரணிகளையும் **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

### வினா 02

அண்மையில் நடைபெற்ற **வரையறுக்கப்பட்ட லோட்டஸ் கம்பனியின்** பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் கீழ்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன:

(1) திறனற்ற செயற்பாடுகள் காரணமாக வியாபார அலகொன்றின் உற்பத்தி வரிசையை மூடுதல்

(2) புதிய சந்தையொன்றில் தொழிற்படுவதற்காக வேறொரு தரப்பினருடன் கூட்டுத் தொழிற்பாட்டு ஏற்பாடொன்றில் (joint operation arrangement) பிரவேசித்தல்

(3) நிலையான சொத்துக்களின் காலாந்தரச் (periodical) சரிபார்ப்பினை (verification) மேற்கொள்ளல்

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) இடரைக் குறைப்பதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையொன்றாக இடரினை ஏற்றுக்கொள்ளுதல் என்பது கருத்திற் கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பம் ஒன்றினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) மேலே (1) இலிருந்து (3) வரை குறிப்பிடப்பட்ட இடர்கள் ஒவ்வொன்றிற்கும் பயன்படுத்தக்கூடிய இடர்க் குறைப்பு (risk mitigation) முறைகளை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

கணக்காய்வாளர் உரிமத்தின் அகக் கட்டுப்பாடு உட்பட உரிமத்தினையும் அதன் சூழலையும் விளங்கிக் கொள்வதன் ஊடாக பொருண்மையான பிறழ் கூற்று இடரினை இனங்கண்டு மதிப்பிடுதல் வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கணக்காய்வாளர் விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய, உரிமத்தினதும் அதன் சூழலினதும் மூன்று (03) பகுதிகளை (areas) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) உரிமத்தின் அகக் கட்டுப்பாட்டு முறைமையின் இரண்டு (02) கூறுகளை **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**NZ அசோசியேட்ஸ் (NZ)** ஆனது உறுதிப்பாட்டு சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் வலையமைப்பினைச் சார்ந்த பட்டயக் கணக்காளர் நிறுவனமாகும். **NZ** தொடர்புபட்ட ஏனைய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

- **ரவிநாத், NZ** இன் முகாமைப் பங்காளராவார்.
- **NZ** இல் ஒரு முகாமையாளரும் 2 சிரேட்ட பணியாளர்களும், 5 பணியாளர்களும் தொழில் புரிகின்றனர்.
- தற்போது முகாமையாளர் வெளிநாட்டு அலுவலகமொன்றிற்குப் பணிக்காக அனுப்பப்பட்டுள்ளதால் அடுத்த 6 மாதங்களுக்கு அவர் அலுவலகத்திற்கு வரமாட்டார்.
- ஒரு (01) சிரேட்ட பணியாளரும் மூன்று (03) பணியாளர்களும் தற்போது ஒரு மாத கால கற்கை விடுப்பில் (லீவு) உள்ளனர்.
- **ரவிநாத்** இரு பாரிய கணக்காய்வுகளில் நேரடியாக ஈடுபட்டுள்ளதுடன் ஒரு வார காலத்தில் அறிக்கை வழங்குவதற்கும் இணங்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) **NZ** இல் நன்கு முகாமைப்படுத்தப்படாத, தரக் கட்டுப்பாட்டு முறைமையின் மூலகங்கள் (elements) மூன்றினை (03) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) **NZ** நிறுவனத்தினுள் தரக் கட்டுப்பாட்டினைப் பேணுவதற்கான **ரவிநாத்தின்** பொறுப்பினை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

முதலீட்டுச் சபை (BOI) கம்பனியான **வரையறுக்கப்பட்ட சஞ்சீவ் (தனி) கம்பனியானது** பட்டயக் கணக்காளர் நிறுவனமான **கமல் அசோசியேற்சின்** கணக்காய்வு வாடிக்கையாளர் ஆகும். சிரேட்ட கணக்காய்வு அலுவலரான நீங்கள் தற்போது **வரையறுக்கப்பட்ட சஞ்சீவ் (தனி) கம்பனியின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சட்டநியதிக் கணக்காய்வினை மேற்கொண்டு வருகிறீர்கள். BOI உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் அடிப்படையில் கம்பனியானது இந்த நிதியாண்டில் ஏற்றுமதியிலிருந்தான வருமானத்தினைக் கணக்காய்வாளர் மூலம் சான்றுப்படுத்தும்படி கேட்கப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மேற்படி ஈடுபடுத்தல் தொடர்பில் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முத்தரப்பினர் தொடர்புமுறை (three party relationship) மற்றும் அடிப்படை விடயம் (subject matter) ஆகிய இரண்டினையும் **தொடர்புபடுத்துக.** (06 புள்ளிகள்)

(b) மேலே விபரிக்கப்பட்ட உறுதிப்படுத்தல் ஈடுபடுத்தலினை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் முகாமை செய்தலில் **கமால் அசோசியேற்ஸ்** மேற்கொள்ள வேண்டிய நான்கு (04) தேவைப்பாடுகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

(A) **பார்க் டிரேடிங் PLC** ஆனது வீட்டுப் பாவனைப் பொருட்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பனியின் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சட்டநியதிக் கணக்காய்வாளராக பட்டயக் கணக்காளர் நிறுவனமான **L.M பெர்னாந்து அன்ட் கம்பனி** உள்ளது. கணக்காய்வாளர் 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வினைத் திட்டமிட தற்போது ஆரம்பித்துள்ளார்.

- விலைப்பட்டியல் (invoice) தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கம்பனி வருமானத்தினை ஏற்பிசைவு செய்யும் அதேவேளை பொருட்களை ஏற்றுக்கொள்ளுதல் ஆனது விலைப்பட்டியல் தயாரிக்கப் பட்ட நாளுக்கு அடுத்துவரும் நாளில் நிகழ்கின்றது.
- வருமானத்தின் ‘கிடைப்பனவு (occurrence)’ ஆனது கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய பகுதிகளில் ஒன்றெனக் கணக்காய்வுப் பங்காளர் தெரிவித்துள்ளார்.
- கம்பனியின் வருமானத்தினை பரீட்சிப்பதற்கு இணைந்த அணுகுமுறையினை (combined approach) கடைப்பிடிக்குமாறு கணக்காய்வுப் பங்காளர் கேட்டுள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) இணைந்த அணுகுமுறை என்பதன் கருத்தினை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(b) கம்பனியின் வருமானக் கிடைப்பனவைப் பரீட்சிக்க, கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய மூன்று (03) வலுவளிப்பு கணக்காய்வு விதிமுறைகளை (Substantive audit procedures) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(B) உரிய கால அடிப்படையில் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு ஆவணப்படுத்தலைத் (audit documentation) தயாரிப்பது கணக்காய்வின் தரத்தினை மேம்படுத்த உதவும். அதற்காகக் கணக்காய்வாளர் வேலைத்தாளைப (working paper) பயன்படுத்துகின்றார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 'கணக்காய்வு ஆவணப்படுத்தல்' என்பதை **பொருள் வரையறை செய்க.** (02 புள்ளிகள்)

(b) வேலைத்தாளில் உட்படுத்தப்படும் மூன்று (03) அடிப்படைத் தகவல்களை **நிரற்படுத்துக.**
(03 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

நீங்கள் **வரையறுக்கப்பட்ட IT சொலுஷன்ஸ் (தனி) கம்பனியின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்குப் பொறுப்பான கணக்காய்வு முகாமையாளர் ஆவீர்கள். இந்தக் கம்பனி IT தொடர்புபட்ட உபகரணங்களை இறக்குமதி செய்து விற்பனை செய்கிறது.

வேலைத்தாள்களின் உமது மீளாய்வு கீழ்வருவனவற்றைக் காட்டியது:

- மதிப்பீட்டு அறிக்கையின்படி இறுதித் தொக்குகள் - ரூபா 12,677,850/-.
- பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் சில உருப்படிகள் கிரயங்களிலும் பார்க்க குறைவான விலைக்கு விற்கப்பட்டிருந்தன. இது தொக்கு மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.
- அந்த உருப்படிகள் அவற்றின் கிரயம் மற்றும் நிகர தேறத்தக்க பெறுமதி இரண்டிலும் குறைந்த பெறுமதியில் மதிப்பிடப்பட வேண்டியிருப்பின், தொக்குகளின் பெறுமதி ரூபா 4,655,000/- இனால் குறைவடைந்திருத்தல் வேண்டும்.
- எனினும் நிதிக் கூற்றுக்களில் தொக்குகளின் பெறுமதியை செம்மையாக்கம் செய்வதற்கு முகாமை இணங்கியிருக்கவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) கணக்காய்வாளர் ஒருவர் மாற்றப்படாத (Unmodified) கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றினை எப்போது வழங்க வேண்டும் என்பதை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) மாற்றப்பட்ட (modified) அபிப்பிராயங்களின் இரண்டு (02) வகைகளை **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(c) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்தினை தெரிவித்தலில் மேற்படி செயற்பாடுகளின் தாக்கத்தினை **மதிப்பிடுக.**
(05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி *B* முடிவு

# <u>பகுதி C</u>

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட சரத் இஞ்ஜினியரிங் (தனி) கம்பனியானது** யப்பானிய AC வடிகட்டிகளின் (AC filters) ஒரேயொரு இலங்கை முகவராகும். சில்லறை விற்பனைகள் காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் உள்ளூர் முகவர்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன. தற்போது 28 உள்ளூர் முகவர்களும் 2 சில்லறை விற்பனை நிலையங்களும் உள்ளன. கம்பனியின் வருடாந்தப் புரள்வு (விற்பனை) ரூபா 100 மில்லியனுக்கு அதிகமாகும்.

கம்பனியின் தலைவரான **சரத்,** கம்பனியின் அகக் கணக்காய்வாளராக உமது கணக்காய்வு நிறுவனத்தை நியமித்துள்ளார். கணக்காய்வுப் பங்காளர் உம்மிடம் மாதாந்த அகக் கணக்காய்வுகளை நடாத்தி உமது அவதானிப்புகள் பற்றிய அறிக்கையினைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார். இப்போது அகக் கணக்காய்வினை ஆரம்பித்த நீங்கள் கீழ்வருவனவற்றை அவதானித்துள்ளீர்கள்:

***காசு முகாமை :***

- காசு மற்றும் காசோலைச் சேகரிப்புகள் மற்றும் கொடுப்பனவுகள் அத்துடன் சிற்றுக் காசுச் செலவுகளைப் பதிவு செய்வதற்கு கணக்காளர் எக்செல் தாள்களை (excel sheets) தயாரிக்கிறார்.
- சகல காசு/காசோலைப் பெறுவனவுகளுக்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படுகின்றது.
- அவசரக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக கையொப்பமிடப்பட்ட வெற்றுக் காசோலைகள் காசாளரிடம் உள்ளன.
- கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டவுடன் அச்சுப்பதிப்பு செய்யப்பட்ட கொடுப்பனவுச் சான்றுறுதிச் சீட்டுக்களும் (payment voucher) உரிய சான்றுப்படுத்தும் ஆவணங்களும் (supporting documents) கொடுப்பனவுக் கோப்பில் (payment file) கோப்பிடப்படுகின்றன.
- வங்கிக் கணக்கிணக்கங்கள் காசாளரினால் தயாரிக்கப்படுவதுடன் அவரின் வேலைப்பளு காரணமாக கடந்த இரு மாதங்களுக்கான வங்கிக் கணக்கிணக்கங்கள் தயாரிக்கப்படவில்லை.

***தொக்கு முகாமை :***

- களஞ்சிய முகாமையாளர், கம்பனியில் 15 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் கம்பனியின் தொக்கு உருப்படிகள் பற்றியும் நல்ல அறிவினைக் கொண்டுள்ளார்.
- கம்பனிக்குப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டதும் வழங்குநரால் வழங்கப்பட்ட உருப்படிகளின் நிரலுடன் பெறப்பட்ட அளவுகள் (quantities) பௌதிகரீதியாகச் சரிபார்க்கப்பட்டதன் (verifying) பின்னர் பொருட் பெறுவனவுக் குறிப்பு (GRN) தயாரிக்கப்படுகிறது.
- பௌதிகரீதியான தொக்குச் சரிபார்ப்பானது தொக்கு உருப்படிகளில் எவ்வித வித்தியாசங்களையும் காட்டவில்லை.
- சகல வழங்கல்களும் அங்கீகரிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுவதுடன் பதிவுகளும் உரிய முறையில் நிகழ்நிலைப்படுத்தப்படுகின்றன (updated).
- பொருட் கோரிக்கைக் குறிப்பு (MRN) நடைமுறையில் உள்ளதுடன் சகல வழங்கல்களும் ஒப்புதலளிக்கப்பட்ட விலைப்பட்டியல் பிரதிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் 'வழங்கப்பட்டது' எனும் முத்திரைப் பதிவும் விலைப்பட்டியல்களில் இடப்படுகிறது.
- களஞ்சிய முகாமையாளர் மாதாந்தத் தொக்குச் சரிபார்ப்பினை கணக்குப் பிரிவு பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்கொள்கின்றார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஒரு வியாபாரத்தின் காசு முகாமை மற்றும் தொக்கு முகாமைச் செயன்முறைகள் தவிர்ந்த இரண்டு (02) பிரதான வியாபாரச் செயன்முறைகளை (business processes) **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(b) மேலே விபரிக்கப்பட்ட காசு முகாமைச் செயன்முறையின் நான்கு (04) பலவீனங்களை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(c) கம்பனியின் தொக்கு முகாமைச் செயன்முறையின் நான்கு(04) பலங்களை (Strengths) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(d) **வரையறுக்கப்பட்ட சரத் இஞ்ஜினியரிங் (தனி) கம்பனியின்** பதிவுகளின் செம்மையை அறுதியீடு செய்வதற்கு (verify) அகக் கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய பகுப்பாய்வு விதிமுறைகள் (analytical procedures) மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(e) **சரத்துடன்** மேற்கொள்ளப்பட்ட ஆரம்பக் கலந்தாய்வின்போது களஞ்சியப் பிரிவு திறன்மிக்க அகக் கட்டுப்பாட்டு முறைமையினைக் கொண்டுள்ளதால் கம்பனியின் தொக்கு முகாமை தவறுவதற்குச் சாத்தியமில்லை எனும் அபிப்பிராயத்தினை அவர் கொண்டிருப்பது தெரிய வந்தது.

**சரத்தினுடைய** மேற்படி கூற்றுடன் நீங்கள் உடன்படுகிறீர்களா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(f) கம்பனியானது அகத்தே விருத்தி செய்யப்பட்ட கணினிமயப்படுத்திய பொதியினைக் கொண்டிருந்த போதிலும் அது விலைப்பட்டியலிடல், பதிவுசெய்தல், வாடிக்கையாளர் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் இருப்புப் பதிவுகளைப் பேணுதல் ஆகியவற்றிற்கு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

காசேடு, வங்கி ஏடு, பேரேட்டுக் கணக்குகள் ஆகியவற்றுடன்கூடிய பூரணமான கணக்கீட்டுப் பொதியொன்றைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி உமது நிறுவனம் வலியுறுத்தியுள்ளது. முறைமையின் செயலொழுங்குச் செயற்கூற்றுக்களில் (programs of the system) அதிகாரமளிக்கப் படாத மாற்றங்களைத் தடுப்பதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்கு கம்பனி கொண்டிருக்க வேண்டிய சாத்தியமான கட்டுப்பாடுகள் பற்றிச் **சரத்** கேட்டுள்ளார்.

முறைமையின் செயலொழுங்குச் செயற்கூற்றுக்களில் அதிகாரமளிக்கப்படாத மாற்றங்களைத் தடுப்பதற்கு அல்லது கண்டுபிடிப்பதற்குக் கொண்டிருக்கவேண்டிய நான்கு (04) கட்டுப்பாடுகளை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) நீங்கள் **வரையறுக்கப்பட்ட TR (தனி) கம்பனியின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேட்ட அலுவலர் ஆவீர்கள். **வரையறுக்கப்பட்ட TR (தனி) கம்பனியின்** ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு:

***கிரயம்*** *(ரூபா '000)*

| சொத்துக்கள் | 2018 ஏப்ரல் 01 இல் மீதி | சேர்ப்பனவுகள் | விற்பனைகள் | 2019 மார்ச் 31 இல் மீதி |
|---|---|---|---|---|
| காணி | 58,000 | - | - | 58,000 |
| கட்டடங்கள் | 25,000 | - | - | 25,000 |
| இயந்திரம் | 25,670 | 3,450 | - | 29,120 |
| மோட்டார் வாகனங்கள் | 10,450 | - | 2,400 | 8,050 |
| **மொத்தம்** | **119,120** | **3,450** | **2,400** | **120,170** |

**தேய்மானம்** *(ரூபா '000)*

| **சொத்துக்கள்** | **2018 ஏப்ரல் 31 இல் மீதி** | **ஆண்டிற்கான கட்டணம்** | **விற்பனைகள்** | **2019 மார்ச் 31 இல் மீதி** |
|---|---|---|---|---|
| கட்டடங்கள் | 10,000 | 2,500 | - | 12,500 |
| இயந்திரம் | 15,402 | 3,080 | - | 18,482 |
| மோட்டார் வாகனங்கள் | 4,703 | 1,150 | 2,400 | 3,453 |
| **மொத்தம்** | **30,105** | **6,730** | **2,400** | **34,435** |

**குறிப்பு:**

ஆண்டின் இறுதியில், காணி மற்றும் கட்டடம் தொழில்சார் மதிப்பீட்டாளரால் மீள்மதிப்புச் செய்யப்பட்டதுடன் மீள்மதிப்புத் தொகைகள் கீழ்வருமாறு:

காணி : ரூபா 75,000,000/-

கட்டடம் : ரூபா 30,000,000/-

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மேற்படி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பற்றிய கணக்காய்வு விதிமுறைகளை மேற்கொள்ளும்போது நீங்கள் சேகரிக்கக்கூடிய நான்கு (04) கணக்காய்வுச் சான்றுகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) மீள்மதிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களைக் கணக்காய்வு செய்வதில் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய மூன்று (03) கணக்காய்வு விதிமுறைகளைக் (audit procedure) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) எழுத்து வடிவிலான முகாமைப் பிரதிநிதித்துவக் கடிதம் தேவைப்படுத்துகின்ற இரண்டு (02) முக்கிய விடயங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(d) மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் தொழில்சார் மதிப்பீட்டாளருடன் தொடர்பாடும்போது (dealing) நீங்கள் கவனத்திற் கொள்ளவேண்டிய நான்கு (04) முக்கிய விடயங்களை **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட AB (தனி) கம்பனியின்** முகாமைப் பணிப்பாளர் பட்டயக் கணக்காளர் நிறுவனமான **R & R அசோசியேட்ஸ்** இன் ஒரு பங்காளரான **சுதத்திடம் வரையறுக்கப்பட்ட AB (தனி) கம்பனியின்** 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சட்டநியதிக் கணக்காய்வுப் பணியினை (audit engagement) உடனடியாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுள்ளார். **R & R அசோசியேட்ஸ்** ஆனது இதற்கு முன்னர் **AB (தனி) கம்பனியின்** வேலைகளில் ஈடுபட்டதில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது:**

இந்தக் கணக்காய்வினை **சுதத்** உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(C) **வரையறுக்கப்பட்ட UB (தனி) கம்பனியானது** 2000 ஆம் ஆண்டிலிருந்து **எரிக் அசோசியேற்றின்** கணக்காய்வு வாடிக்கையாளராக இருந்து வருகின்றது. 2018/19 ஆம் நிதியாண்டிலிருந்து இந்தக் கணக்காய்வின் ஈடுபடற் பங்காளராக **நிமால்** இருக்கின்றார். **வரையறுக்கப்பட்ட UB (தனி) கம்பனியின்** தலைவர், **நிமாலுக்குப்** புதுவருட அன்பளிப்பாக மாலைதீவிலுள்ள **வில்லா** (Villa) ஒன்றில் 5 நாட்கள் தங்குவதற்கு விருப்பறிவிப்புச் (offered) செய்துள்ளார்.

கணக்காய்வின்போது கம்பனியின் தலைவர் **எரிக் அசோசியேற்ஸ்** இன் கணக்காய்வு முகாமையாளரைத் தமது கம்பனியின் நிதி முகாமையாளராக இணைந்து கொள்ளுமாறு கேட்டுள்ளதுடன், கணக்காய்வு முகாமையாளர் அந்தப் பணியின் கட்டுறுப்புக்கள் (நிபந்தனைகள்) பற்றி தலைவருடன் கலந்தாலோசித்து வருகின்றார். கம்பனி அதன் புதிய பண்டகசாலை நிருமாணம் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் ரூபா 30 மில்லியன் பெறுமதியான கடன்படுகைக் கிரயத்தை (Borrowing cost) மூலதனப்படுத்தியிருந்ததை கணக்காய்வு அணி இனங்கண்டிருந்தது. கணக்காய்வுக்காகத் தீர்மானிக்கப்பட்ட பொருண்மை (materiality) ரூபா 15 மில்லியன் ஆகும். கடன்படுகைக் கிரயத்தின் மூலதனப்படுத்தலுக்கு உடன்படாவிடில் கணக்காய்வுக் கட்டணத்தில் குறைப்பினை ஏற்படுத்த இருப்பதாக கம்பனித் தலைவர் கணக்காய்வுப் பங்காளரிடம் தெரிவித்துள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேலே தரப்பட்டுள்ள விவரணம் தொடர்பில், ஒழுக்கநெறிகளின் (ethics) அடிப்படைக் கோட்பாடுகளுடன் ஒத்திசைவுக்கான அச்சுறுத்தல்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |